# 14

# சபைக்கான தெய்வீகப் பெயர்கள்

புதிய ஏற்பாட்டைக் கவனத்துடன் படிக்கும்போது, சபையானது ஒரு விசேஷித்த உயிர்ப் பொருளாகப் படைக்கப்பட்டது என்பது வெளியாகின்றது. ஆகவே, அது ஏவப்பட்ட எழுத்தாளர்களால் விசேஷித்த வழிகளில் குறிப்பிடப்பட்டது. இந்தக் குறிப்புரைகளை மூன்று குழுக்களாகப் பிரிக்க முடியும். அதன் பணிகள், உரிமைத்துவம் மற்றும் உறவுமுறை ஆகியவைகளுக்குக் குறிப்பிட்ட அர்த்தத்துடன் அவைகள் பயன்படுத்தப்படுகின்றன. தெய்வீக வழி நடத்துதலால் அவைகள் கொடுக்கப்பட்டன, மற்றும் தெய்வீக நோக்கங்களை நிறைவேற்றுகின்றன.

சபையைக் குறிப்பிடுவதற்குப் பரிசுத்த ஆவியானவரால் பயன் படுத்தப்பட்ட சொற்றொடர்கள் வெறும் விளக்கங்கள் என்று எண்ணப்படக் கூடாது.[1] புதிய ஏற்பாடானது, கிறிஸ்துவை உண்மையுடன் பின்பற்றுபவர்களை அவரது “சபை”, அவரது “சரீரம்” மற்றும் அவரது “இராஜ்யம்” என்று அழைக்கின்றது. இந்தத் தெய்வீகப் பெயர்கள்[2] கர்த்தர் நிலைநாட்டிய சபையை அடையாளப்படுத்தி, அதன் சிறப்பியல்பைக் கூறி விளக்கப்படுத்துகின்றன. இவைகளை ஜாக்கிரதையாய்க் கவனியுங்கள்.

## பணியின் பெயர்கள்

*புதிய ஏற்பாட்டில் சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ள சில பெயர்கள், சபையானது ஒரு சரீரமாக, உயிருள்ளதாக இருந்து, நிறைவேற்றும் பணி(வேலை)யுடன் தொடர்புடையதாக இருக்கின்றன. கர்த்தருடைய சபையின் நோக்கம், அமைப்பு மற்றும் செயல்பாடு ஆகியவற்றை இந்தப் பெயர்கள் முக்கியத்துவப்படுத்துகின்றன.*

*கிறிஸ்து நிலைநாட்டியது எளிய வகையில் "சபை" (கொலோ. 1:18, 24) என்று குறிப்பிடப்படுகின்றது. இந்தச் சொற்றொடர், "கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களாய் ஆன மக்களின் கூட்டம்'' என்று அர்த்தம் தருகின்றது. இந்த மக்கள், ஒரு கூட்டம் என்ற வகையில் (1 கொரி. 11:18), ஒரு உள்ளூர் வகையில் (1 கொரி. 1:2), ஒரு பெரிய பகுதியின் வகையில் (1 கொரி. 16:1) மற்றும் உலகளாவிய வகையில் (எபே. 5:23) குறிக்கப்படுகின்றார்கள். கிறிஸ்து நிலைநாட்டியதன்-அவரது இரத்தத்தினால் மீட்கப்பட்டு, அவருக்காக வாழ்ந்து, தேவனை ஆராதித்து, அவரது ஊழியத்தைச் செய்யும் மக்களின் குழு ஒன்றின்-அடிப்படை அர்த்தத்தை இந்தப் பெயர் அறிவிக்கின்றது.*

*சபையின் தனிப்பட்ட உறுப்பினர்கள் "கிறிஸ்தவர்கள்" என்று அழைக்கப்படுகின்றனர், ஏனென்றால் அவர்கள் கிறிஸ்துவைப் போல் இருப்பதற்கு முயற்சி செய்கின்றார்கள். (''கிறிஸ்தவர்'' என்ற வார்த்தையானது "கிறிஸ்துவைப் போலாகுதல்" அல்லது "கிறிஸ்துவைப் பின்பற்றுதல்" என்ற அர்த்தம் தருகின்றது.) அந்தியோகியாவில் சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்ற பெயர் முதன் முதலாகக் கொடுக்கப்பட்டது (அப். 11:26). இந்தப் பெயர் கொடுக்கப்பட்ட சூழ்நிலைகள் தெளிவாகக் காணப்படுவதில்லை, ஆனால் அதை, தேவனே தமது மக்களுக்காகத் தேர்ந்தெடுத்தார் என்பதை நாம் உறுதியாய்க் கூற முடியும். ஒரு பெயர் என்ற வகையில் இது, புதிய ஏற்பாட்டில் மூன்று முறைகள் காணப்படுகின்றது (அப். 11:26; 26:28; 1 பேது. 4:16).*

*சபையின் உறுப்பினர்களைப் ''பரிசுத்தவான்கள்'' என்றும் வேதாகமம் குறிப்பிடுகின்றது. இவர்கள் தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டு பிரித்தெடுக்கப்பட்ட மக்களாயிருக்கின்றார்கள். எபேசியருக்கு எழுதும்போது பவுல், "தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல், எபேசுவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது" (எபே. 1:1) என்று கூறினார்.* King James *வேதாகம*

*மொழிபெயர்ப்பில் தீத்து 2:14ல் ''தனிவகைப்பட்ட ஜனங்கள்'' என்றுள்ளது. இப்புத்தகத்தின் பின்பகுதியில் உள்ள புதிய ஏற்பாட்டில் "தமக்குரிய சொந்த ஜனங்கள்" என்று கூறப்படுகின்றது. "பரிசுத்தம்" அல்லது "புனிதம்" என்பதன் அடிப்படை அர்த்தமானது, "தேவனுக் காகப் பிரித்தெடுத்து வைக்கப்பட்டது" என்பதாகும். தேவனுடைய சபை என்பது "தேவனுக்குச் சொந்தமான மக்கள்", பரிசுத்தமான மக்கள், தேவனுக்காகப் பிரித்தெடுக்கப்பட்ட மக்கள் என்றுள்ளது. கிறிஸ்தவர்கள் பரிசுத்தமான ஒரு அழைப்பினாலே அழைக்கப் பட்டிருக்கின்றார்கள் (2 தீமோ. 1:9); அவர்கள் பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாய் வாழ வேண்டும் (2 பேது. 3:11); அவர்கள் கடைசி நாளிலே அவருக்கு முன்பாக ''பரிசுத்தராகவும், குற்றமற்றவர்களாகவும், கண்டிக்கப்படாதவர்களாகவும்'' நிற்க வேண்டியிருக்கின்றது (கொலோ. 1:21ஆ).*

*வேதாகமத்தின் சில மொழிபெயர்ப்புகளில் மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகிய சுவிசேஷங்களின் தலைப்புக்களில் ''பரிசுத்த'' என்றும், வெளிப்படுத்தின விசேஷமானது ''பரிசுத்த யோவானுக்கு தெய்வீக வெளிப்படுத்துதல்'' என்று தலைப்பிடப் பட்டும் காணப்படுகின்றன. புதிய ஏற்பாட்டின் இந்தப் புத்தகங் களுக்கு இந்தத் தலைப்புகள் தேவனிடத்திலிருந்தல்ல, மனிதனிடத் திலிருந்தே வந்தன. கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒவ்வொருவரையும் "பரிசுத்தவான்" என்றுதான் புதிய ஏற்பாடு பெயரிடுகின்றது. சபை கூட "பரிசுத்தவான்களின் சபை" என்றே குறிப்பிடப்படுகின்றது (1 கொரி. 14:33). மக்கள் கிறிஸ்தவர்களாகும்போது அவர்கள் தேவனுக்கென்று பிரித்து வைக்கப்படுகின்றார்கள்.*

*மேலும், சபையானது கிறிஸ்துவின் ''சரீரம்'' என்று குறிப்பிடப்படுகின்றது (எபே. 1:22, 23). இந்தச் சொற்றொடர் சில வேளைகளில், சபையானது அதன் பணிகளில் எத்தன்மையுடையது என்பதை விளக்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது (1 கொரி. 12:12-27) மற்றும் சில வேளைகளில் சபையின் உண்மை நிலை என்ன என்பதை அடையாளப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. "கிறிஸ்துவின் சரீரம்'' என்ற சொற்றொடரானது ஒரு பெயராகப் பயன்படுத்தப்படும்போது, சபையின் பணிகளையும் உறவு முறை யையும் வலியுறுத்துகின்றது: சபை என்பது பூமியில் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாய் இருக்கின்றது, அது ஒரு சரீரத்திற்கும், அதன் தலைக்கும் உள்ள தொடர்புபோல் கிறிஸ்துவுடன் தொடர்புபடுத்தப்*

படுகின்றது. கிறிஸ்துவின் ஆவிக்குரிய இந்தச் சரீரத்தில், தனித்தனிக் கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும், அதன் அவயவங்களாயிருந்து செயல்பட வேண்டுமென்றும், சரீரத்தின் ஒரு பாகமாய் இருக்க வேண்டும் என்றும் கூறப்படுகின்றது. கொரிந்துவில் இருந்த சபைக்குப் பவுல், "நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களா யுமிருக்கிறீர்கள்" என்று எழுதினார் (1 கொரி. 12:27).

சபையானது "இராஜ்யம்" என்றும் குறிப்பிடப்படுகின்றது (அப். 8:12). சில வேளைகளில் "பரலோக ராஜ்யம்" (மத். 16:18, 19) என்ற விளக்கமும், சில வேளைகளில் "தேவனுடைய ராஜ்யம்" (யோவா. 3:3) என்ற விளக்கமும் பயன்படுத்தப்படுகின்றது. இந்த இரண்டு சொற்றொடர்களுமே ஆளுகைப் பகுதியின் ஆவிக்குரிய இயல்பையும் சபை/இராஜ்யத்தின் அதிகாரத்தையும் பிரதிபலிக்கின்றன (யோவா. 18:36). இந்த பூமியில் தேவனுடைய அதிகாரத்திற்குத் தங்களை ஒப்புக் கொடுத்து, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களால் ஆன குழுவே சபை என்னப்படுகின்றது. கிறிஸ்து அரசராக இருந்து இப்பொழுது தமது இராஜ்யமாகிய சபையில் அரசாண்டு கொண்டிருக்கின்றார் (1 கொரி. 15:24, 25). சபைக்கு தெய்வீகமான ஒரு தலைவர் அல்லது ஒரு அரசர் இருக்கின்றார், மற்றும் சபையானது தெய்வீக அதிகாரத்தினால் ஆளுகை செய்யப்படுகின்றது. பூமியில் வாழ்ந்தாலும், இயேசு அரசரின் அதிகாரத்திற்கு சபையின் உறுப்பினர்கள் தலை வணங்கி, அவரது ஆவிக்குரிய இராஜ்யத்தின் "குடிமக்களாக" அவர்கள் வாழ்கின்றார்கள் (பிலி. 3:20).

தேவனுடைய இராஜ்யத்தின் பாகமாய் இருக்கின்றவர்கள், பரலோக இராஜ்யத்தின் ''குடிமக்கள்'' என்றும் விவரிக்கப் படுகின்றார்கள் (மத். 16:18, 19). பவுல், "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்" (பிலி. 3:20) என்று கூறினார். மேலும் அவர், "ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக் கல்லாயிருக்கிறார்" (எபே. 2:19, 20) என்றும் எழுதினார். கிறிஸ்து நமது அரசாயிருக்கிறார் (1 கொரி. 15:24, 25). கிறிஸ்துவின் அதிகாரத்தின் கீழ் வாழ்பவர்கள் மட்டுமே அவரது இராஜ்யத்தில்

இருக்கின்றார்கள் (மத். 7:21).

கிறிஸ்தவர்கள், பழைய ஏற்பாட்டில் தானியேல் கூறிய நித்திய இராஜ்யத்தின் குடிமக்களாயிருக்கின்றார்கள் (தானி. 2:44). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் இதை ''அசைவில்லாத'' இராஜ்யம் என்று விளக்கினார்: ''ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம், ...'' (எபி. 12:28). இன்றிலிருந்து ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு நீங்கள் எங்கு இருப்பீர்கள் என்று அடுத்த முறை உங்களையே கேட்டுக் கொள்ளும் பொழுது, நீங்கள் கிறிஸ்தவராய் இருந்தால் உங்களுக்கு நீங்களே, "நான் நித்திய இராஜ்யத்தில் இருப்பேன்!" என்று கூறிக் கொள்ள முடியும். தேவனுடைய இராஜ்யம் இன்று இருந்து, நாளை இல்லாமல் போய் விடுவதில்லை - அது நித்தியமானது.

## உரிமைத்துவத்தின் பெயர்கள்

சபையானது தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் உரிமைத்துவ உறவுடையதாய் இருக்கின்றது என்பது, புதிய ஏற்பாட்டில் மூன்று வழிகளில் குறிப்பிடப்படுகின்றது. இந்தச் சொற்றொடர்கள், உரிமைத்துவம் மற்றும் தலைமைத்துவத்தைக் குறிப்பிடுகின்றன.

முதலாவது, சபை என்பது ''கிறிஸ்துவின் சபை'' என்று குறிப்பிடப்படுகின்றது. பவுல், ரோமாபுரியாருக்கு எழுதிய நிருபத்தின் முடிவில், அகாயாவில் இருந்த சபையாரின் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்: "கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" (ரோமர் 16:16ஆ). இந்தப் பெயரானது சபையின் உரிமைத்துவத்தை யும். அடையாளத்தையும் குறித்துக் காட்டுகின்றது. சபையை கிறிஸ்து நிலைநாட்டி, விலைக்கு வாங்கி, உரிமையாக்கி, அவரே அதன் தலைவராயிருப்பதால், அது கிறிஸ்துவின் சபையாக இருக்கின்றது. கிறிஸ்துவுக்குள் ஒருவர் மனமாற்றப்படும்போது அவர் கிறிஸ்துவினு டையவராகின்றார் (1 கொரி. 6:20). அவர் கிறிஸ்தவர் என்று அழைக்கப்படுமளவுக்கு கிறிஸ்துவின் முழுமையாக அடையாளப் படுத்தப்பட்டு, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவராகின்றார் (அப். 11:26; 26:28; 1 பேது. 4:16). கிறிஸ்துவைப் பின்பற்றும் விசேஷித்த குழுவானது, கிறிஸ்துவே அதன் உரிமையாளர், மற்றும் அவர் அதன் ஒரு பாகமாயிருக்கின்றார் என்று காண்பிப்பதற்காகக் கிறிஸ்துவின் சபை என்று அழைக்கப்படுகின்றது.

*இரண்டாவது, சபை என்பது, "தேவனுடைய சபை" என்று குறிப்பிடப்படுகின்றது (1 கொரி. 1:2). சபையானது புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் சபை என்று குறிப்பிடப்படுகிறதென்றால், அது தேவனுடைய சபை என்றும் குறிப்பிடப்படுமென்று நாம் எதிர்பார்க்கலாம், ஏனென்றால் தாமும், தமது பிதாவும் ஒன்றாக இருப்பதாக இயேசு கூறினார் (யோவா. 10:30). உலகத்தோற்றத்திற்கு முன்பே தேவன் சபையைத் திட்டமிட்டார் (எபே. 3:10, 11). சபைக்காக ஆயத்தம் பண்ணும்படியாகவும் (மத். 16:18) அதை கிறிஸ்து தமது இரத்தத்தினால் கிரயம் கொள்ளும்படியாகவுமே (அப். 20:28) அவர் கிறிஸ்துவை உலகத்திற்கு அனுப்பினார்.தேவன், இயேசு கிறிஸ்துவைக் கொண்டு சிலுவையில் நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினதுபோல (2 கொரி. 5:18) கிறிஸ்து சபையைத் தோற்றுவித்து, கிரயம் கொள்ளுகையிலும் தேவன் அவருடன் இருந்தார்.*

*மூன்றாவது, சபையின் உறுப்பினர்கள் "அடிமைகள்" அல்லது "ஊழியக்காரர்கள்" என்று விளக்கப்படுகின்றனர். கிறிஸ்துவுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்து, அவருக்குக் கீழ்ப்படிகிறவர்கள் யாவரும் ஊழியக்காரர்களாய் இருக்கின்றார்கள். புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் ரோமராஜ்யத்தில் அடிமை/எஜமானர் உறவுமுறை என்பது சமூகத்தின் ஒரு பாகமாக இருந்தது. அடிமையொருவர் தமது எஜமானரின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தார். அவருக்கு (அடிமைக்கு) எந்த வித உரிமையும், உடைமையும் இல்லாதிருந்தது. அந்த அடிமை தனக்குத்தானேகூட சொந்தமானவராய் இருந்ததில்லை. கிறிஸ்துவுக்கு நம்மை ஒப்புக் கொடுத்தலுக்கும், அவருடைய வசனத்தின் கீழ் வாழ்வதற்கும் இந்தச் சொற்றொடர் பயன்படுத்தப்பட்டதில் வியப்பேதும் இல்லை. பவுல், "நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே" (கலா. 1:10ஆ; பிலி. 1:1ஐக் காணவும்) என்று எழுதினார். மேலும் அவர், "அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்" (2 கொரி. 10:5) என்றும் கூறினார்.*

*கிறிஸ்தவர்கள்-கிறிஸ்துவைத் தங்கள் எஜமானர் என்று உரிமைகோருகின்றவர்கள் - தங்கள் சொந்த வாழ்க்கைக்குத் தாங்களே எஜமானர்களாய் இருக்க முடியாது. தங்கள் சொந்த விருப்பங்களை*

*அவர்கள் "சிலுவையிலறைய" வேண்டும். அதாவது, பாவம் நிறைந்த தங்கள் சொந்த விருப்பங்களை அவர்கள் அழித்துப் போட்டு, தங்கள் வாழ்க்கையில் தேவனுடைய கட்டளைகளை முதல் இடத்தில் வைக்க வேண்டும். பவுல், "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவை யிலறையுண்டிருக்கின்றேன்" (கலா. 6:14) என்று கூறினார். மேலும் அவர், "இனிமேல் ஒருவனும் எனக்கு வருத்தம் உண்டாக்காதிருப் பானாக; கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறேன்" (கலா. 6:17) என்றும் கூறினார்.*

## உறவு முறையின் பெயர்கள்

*புதிய ஏற்பாட்டில் சபையைக் குறிப்பிடும் அநேக வழிகள், உறவு முறையின் கருத்தை வலியுறுத்துகின்றன. கர்த்தருடைய சபையில் உறுப்பினராயிருப்பது பல்வித உறவுமுறைகளில் ஈடுபடுத்துவதால், இது எதிர்பார்க்க வேண்டியதாகவே இருக்கின்றது.*

*ஏற்கனவே குறிப்பிடப்பட்ட அடிமை/எஜமானர் மற்றும் சரீரம்/ தலை உறவுமுறைகளுடன், "கிறிஸ்தவர்" என்ற வார்த்தையானது சபை உறுப்பினர்கள் தங்களின் கர்த்தருடன் கொண்டுள்ள அழகிய உறவுமுறையை விளக்கப்படுத்துகின்றது. அவர்கள் அவரைப் பின்பற்று பவர்கள், அவர்கள் அவருக்காக வாழ்கின்றார்கள். அவரது பெயரைத் தரித்துக் கொள்கின்றார்கள். அப்போஸ்தலராகிய பவுல் தாம் கிறிஸ்தவரான பிறகு தமது மார்க்கரீதியான வாழ்க்கையை, "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" (பிலி. 1:21) என்ற புகழ் பெற்ற வார்த்தைகளில் விளக்குகின்றார். பவுலின் வாழ்வில் கிறிஸ்து முதலானவராக மட்டும் இருக்கவில்லை-கிறிஸ்துவே அவரது வாழ்வாக இருந்தார்! பவுலின் வாழ்க்கையின் மொத்தமும், மூலப் பொருளும் கிறிஸ்துவே. அவர் உண்மையிலேயே ஒரு கிறிஸ்தவராயிருந்தார்.*

*புதிய ஏற்பாடானது சபையை "தேவனுடைய குடும்பம்" என்றும் விளக்கப்படுத்துகின்றது. கிறிஸ்தவர்களை "தேவனுடைய வீட்டார்" (எபே. 2:19) என்று பவுல் கூறினார். "தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுது*

கிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய் ... இருக்கிறது" (1 தீமோ. 3:15) என்று அவர் தீமோத்தேயுவுக்கு எழுதினார். ஒருவர் கிறிஸ்துவுக்கென்று மனம் மாறும்பொழுது, தேவன் அந்த நபரைத் தமது பிள்ளையாக சுவீகரித்து, குடும்பத்தின் சிறப்புரிமைகளைக் கொடுத்து, கிறிஸ்துடன் கூட நித்திய ஜீவனை சுதந்தரிக்க அவரை வாரிசாக ஆக்கிக் கொள்கின்றார் (ரோமர் 8:15-17; எபே. 1:6). கிறிஸ்தவர்கள், தாங்கள் ஜெபிப்பதற்கென்று பரலோகத்தின் பிதாவானவரைப் பெற்றிருக்கின்றார்கள், அத்துடன் அன்பு செய்யும் ஒரு இரட்சகரை-மூத்த சகோதரரான இயேசு-அவர் மூலமாக ஜெபிக்கப் பெற்றிருக்கின்றார்கள். சகோதர சகோதரிகளான அவர்கள் ஒருவரையொருவர் நேசித்து, ஒருவருக்கொருவர் உதவி செய்து ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துகின்றார்கள் (அப். 2:44).

சபையின் உறுப்பினர்கள், "தேவனுடன் பிள்ளைகள்" என்று குறிப்பிடப்படுகின்றார்கள். அவர்கள் தேவனுடைய விசேஷித்த உறவொன்றைப் பெற்றிருக்கின்றார்கள்; அவர் அவர்களின் பிதாவாக வும், அவர்கள் அவரின் பிள்ளைகளாகவும் இருக்கின்றார்கள். விசுவாசி கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறும்போது, அவர்கள் தேவனு டைய "புத்திரர்களாக" சுவீகரிக்கப்படுகின்றார்கள் (எபே. 1:6). அவருடைய பிள்ளைகள் என்ற முறையில், கிறிஸ்தவர்கள் நித்திய சுதந்திரத்தைப் பெறுகின்றார்கள் (எபே. 1:12), மற்றும் தேவனுடைய பூமிக்குரிய குடும்பத்தின் பெலத்தையும் ஆதரவையும் பெறுகின்றார்கள் (1 தீமோ. 3:15; எபே. 2:19-22). ஆவிக்குரிய இந்தப் பரலோகக் குடும்பத்தில், தேவன் பிதாவாக இருக்கின்றார் (மத். 6:9), இயேசு மூத்த சகோதரராக இருக்கின்றார் (ரோமர் 8:17), மற்றும் எல்லாக் கிறிஸ்தவர்களும் சகோதர சகோதரிகளாய் இருக்கின்றார்கள் (2 பேது. 3:15; 1 யோவா. 2:8-11).

தேவன் தமது பிள்ளைகள்மேல் விசேஷித்த அன்பு காட்டுகின்றார் (1 யோவா. 3:1). அவர் அவர்களைச் சாத்தானிடத்திலிருந்து பாதுகாத்து, அவர்களின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்று கின்றார். பூமிக்குரிய தகப்பனே தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, வல்லமையுள்ள தேவனின்-பரலோகத்தில் இருக்கிற சற்குணரான பிதாவின்-பிள்ளைகள், தாங்கள் கேட்பதற்கும் அதிகமான அழகிய ஈவுகளை அவரிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்று இயேசு போதித்தார் (மத். 7:11ஐக் காணவும்).

ஆதி சபையின் உறுப்பினர்கள் ஒருவரையொருவர் சகோதரராகக் கருதியதோடு, சிநேகிதர்களாகவும் கருதினார்கள் (2 பேது. 3:15; 3 யோவா. 14), அவர்கள் அழகிய நட்புறவில் ஒன்று கூடி நிற்கிறார்கள். கிறிஸ்தவர்கள் மிகவும் உயர்ந்த வகையான நண்பர்களாய் இருக்கின்றார்கள்.

யோவான் தமது மூன்றாவது நிருபத்தை "உனக்குச் சமாதானம் உண்டாவதாக. சிநேகிதர் உனக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள். சிநேகிதரைப் பேர் பேராக வாழ்த்துவாயாக" (3 யோவா. 14) என்று எழுதி முடித்தார். அவர் தம்மைச் சுற்றியிருந்த கிறிஸ்தவர்களை "சிநேகிதர்கள்" என்று அழைத்தார். அந்தக் கடிதத்தைப் பெற்றுக் கொள்ளும் கிறிஸ்தவர்களையும் அவர் ''சிநேகிதர்கள்'' என்று அழைத்தார். இயேசு தம்முடைய சீஷர்களைச் சிநேகிதர்கள் என்று அழைத்தார், இயேசுவின் முன்னுதாரணத்தின்படியே யோவான் இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்தினார் என்பதில் சந்தேகமில்லை. இயேசு தமது சீஷர்களுக்குப் பின்வருமாறு கூறியிருந்தார்:

> ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள். இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறிய மாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன் (யோவா. 15:13-15).

''ஒவ்வொருவரும் விட்டுச் சென்றுவிடும் வேளையிலும் உங்களோடு இருப்பவரே உங்கள் நண்பர்" என்று யாரோ ஒருவர் சொல்லியிருக்கின்றார். இயேசு இவ்வகையான நண்பராகவே இருக்கின்றார். வேறு ஒருவரும் நமக்கு உதவ முடியாமல் போனபோது, அவர் தமது உயிரை, நமக்காகக் கையளித்தார். கிறிஸ்தவர்களும் ஒருவருக்கொருவர் இவ்வகையான நண்பராகவே இருக்க வேண்டும் (1 யோவா. 3:16). கிறிஸ்தவர்கள் "நண்பர்களாய்" இருக்கின்றார்கள்.

*முதல் நூற்றாண்டின் சபையார், "கர்த்தருடைய சீஷர்கள்" (அப். 9:1) அல்லது ''சீஷர்கள்'' (அப். 9:26; 11:26) என்று அடிக்கடிக் குறிப்பிடப்பட்டார்கள். "சீஷன்" என்ற வார்த்தை, கற்றுக் கொள்பவர் அல்லது பின்பற்றுபவர் என்று பொருள்படுகின்றது; இது, கிறிஸ்தவருக்கும் கர்த்தருக்கும் உள்ள தொடர்ந்த உறவு முறையைக் குறிக்கின்றது. ஒரு சீஷர் என்பவர் தமக்கு மேலான ஒருவருக்குத் தம்மை ஒப்புக் கொடுத்தவராக, தம்மை விடப் பெரியவரிடமிருந்து கற்று அறிந்தவராக, அறிவுரைகள் மற்றும் பின்பற்றுதல் மூலமாக தம்மைவிடப் பெரியவரிடமிருந்து தொடர்ந்து கற்றுக் கொள்பவராக இருக்கின்றார். அவர் கேட்பவராக மட்டுமல்ல, கற்பவராகவும், தொடர்ந்து கற்றுக் கொள்பவராகவும் இருக்கின்றார். அவரது கர்த்தர் அவருடைய எஜமானராகவும், போதகராகவும் இருக்கின்றார் (யோவா. 13:13).*

*சுவிசேஷப் புத்தகங்களில் விசேஷமாகப் பயன்படுத்தப்பட்டுள்ள "சீஷன்" என்ற வார்த்தை அவைகளில் 238 முறைகள் வருகின்றது. இது அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் 28 முறைகள் வருகின்றது, நிருபங்களிலோ அல்லது வெளிப்படுத்தின விசேஷம் புத்த கத்திலோ இந்த வார்த்தை காணப்படுவதில்லை. சுவிசேஷப் புத்தகங்களிலிருந்து அப். நடபடிகள் புத்தகத்திற்கும், அப். நடபடிகள் புத்தகத்திலிருந்து நிருபங்களுக்கும் கடந்து செல்லுகையில் இந்தச் சிறப்புச் சொல்லில் தெளிவாய்க் காணப்படும் மாற்றமானது, ஒருவேளை, கிறிஸ்துவின் இப்பூமிக்குரிய வாழ்க்கையின் போது, அவரைப் பின்பற்றியவர்கள் "சீஷர்கள்" என்று குறிப்பிடப்பட்டதன் காரணமாக இருக்கலாம். இதன் பிறகு, நடபடிகள் புத்தகத்தில், நிருபங்களில் மற்றும் வெளி. புத்தகத்தில் அவர்களின் பரிசுத்தமான அழைப்பைக் குறிப்பிடுவதற்காக அவர்கள் ''பரிசுத்தவான்கள்'' என்றோ அல்லது அவர்கள் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள உறவு முறையைக் குறிப்பிடுவதற்காக "சகோதரர்கள்" என்றோ அழைக்கப் பட்டார்கள்.*

*கிறிஸ்து, தாம் பரத்துக்கேறுவதற்கு முன்பு, தமது அப்போஸ்தலர் களுக்குக் கொடுத்த பிரதான கட்டளையில், ''ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ,*

*உலகத்தின் முடிவு பரியந்தம் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" (மத். 28:19, 20) என்றார். புதிய ஏற்பாட்டின் பிற்பகுதியில் "சீஷன்" என்ற வார்த்தை அடிக்கடிக் காணப்படாத போதிலும், அவர் மேற்சொன்ன வழியில் அவ்வார்த்தைக்கு ஒரு தொடர்ச்சியான பயன்பாட்டைக் கொடுத்தார்.*

*சீஷர் என்பவர் வசனத்தை வாழ்க்கையில் நிறைவேற்றுபவராக இருக்கின்றார். யாக்கோபு, "...நீங்கள் திருவசனத்தைக் கேட்கிறவர் களாய் மாத்திரமல்ல, அதன்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" (யாக். 1:22) என்று கூறினார். சீஷர் என்பவர் மாணவருக்கும் மேலானவராக இருக்கின்றார்; அவர் கிறிஸ்துவைப் போலவே இருந்து, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவராக இருக்கின்றார்.*

*இன்னொரு கண்ணோட்டத்திலிருந்து, புதிய ஏற்பாட்டின் சபையானது "தேவனுடைய ஆலயம்" என்று அழைக்கப்படுகின்றது. கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல், நீங்கள் தேவனு டைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், "தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?" (1 கொரி. 3:16) என்று கூறினார். கிறிஸ்தவர்களின் கூட்டமாகிய சபையானது தேவன் வாசம் பண்ணும் இடமாக அமைகின்றது. இன்றைய நாட்களில் தேவனுடைய வாசஸ்தலமானது உயிருள்ளதாக, சபையாக இருக்கின்றது. இவ்விதமாக கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் "பரிசுத்தவான்கள்" என்று அழைக்கப்படுகின்றார்கள், ஏனென்றால் பரிசுத்த ஊழியத்தைச் செய்யும்படியாகவும், தேவனுக்கு ஒரு வாசஸ்தலத்தைத் தரும்படியாகவும் அவர்கள் சுவிசேஷத்தினால் பிரித்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள் (1 கொரி. 1:2).*

*புதிய ஏற்பாடானது ஒரு வசனப்பகுதியில் சபையை, "முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபை" (எபி. 12:23) என்று குறிப்பிடுகின்றது. சபையானது எதிர் காலத்தில் ஒரு தனிச்சிறப்பான உறவுமுறையினால் நிலைநிற்கின்றது, ஏனென்றால் சபையின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் "பரலோகத்தில் பேரெழுதப் படுகின்றார்." கிறிஸ்து கொடுத்துள்ள நித்திய நம்பிக்கையின் காரண மாக, கிறிஸ்தவர்களின் எதிர்காலமானது பயம் நிறைந்ததாகவோ கலக்கம் உள்ளதாகவோ இருப்பதில்லை. இந்த உறவுமுறைப் பெயர்களானது, சபை என்றால் என்ன என்பதைப் பற்றியும், சபையார் எவ்விதம் வாழ வேண்டும் என்பதும் பற்றியும் ஆழ்ந்த அறிவைத் தருகின்றன. அவைகள், கிறிஸ்தவர்கள் இந்தப் பூமியில் எவ்விதம் வாழ*

வேண்டுமென்றும், இரட்சிக்கப்பட்டவர்கள் எதிர்காலத்தில் தேவனுடன் எவ்விதத்தில் இருப்பார்கள் என்றும் கூறுகின்றன.

## முடிவுரை

ஆபிராம் என்ற பெயர் அவருக்கு இனியும் பொருந்தாது என்பதால் தேவன் ஆபிராமின் பெயரை ஆபிரகாம் என்று மாற்றினார். ஆபிராம் திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாவார் என்று கூறப்பட்டது (ஆதி. 17:5). ஆபிராம் என்றால் "உயர்வான தகப்பன்" என்று அர்த்தம். ஆபிராம் என்பது அர்த்தமுள்ள ஒரு பெயராகவே இருந்தது, ஆனால் அது ஆபிரகாமின் எதிர்காலத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை. ஆபிரகாம் என்றால் "திரளான ஜாதிகளின் தகப்பன்" என்று அர்த்தம், ஒரு நாட்டின் மக்களுக்கே தகப்பனான ஒரு மனிதருக்கு இதுவே சரியான பெயராகும். தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த இந்தப் பெயரானது தேவனுக்கும் ஆபிரகாமுக்கும் சில விஷயங்களை அர்த்தப்படுத்தியது. அது போலவே, சபைக்குத் தேவன் கொடுத்துள்ள பெயர்கள் தேவனுக்குச் சில விஷயங்களை அர்த்தப்படுத்துகின்றன, அவைகள் நமக்கு இன்னும் அதிகமாக அர்த்தப்பட வேண்டும்.

புதிய ஏற்பாட்டின் சபையைக் குறிப்பிட முறையான வழிகள் இருக்கின்றன, அவைகள் பயன்படுத்தப்பட வேண்டும். வேதாகமத்தில் காணப்படாத பெயர்களைப் பயன்படுத்துகையில், நாம் சபையை அடையாளம் காண்பதில் குழப்பமடைகின்றோம். மக்கள் குழுவொன்று புதிய ஏற்பாட்டின் சபையாக இருக்க வேண்டும் என்று தேடினால், புதிய ஏற்பாட்டின் சபையென்று அறியப்பட வேண்டும் என்று விரும்பினால், சபைக்குப் புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள பெயர்களையே அவர்கள் பயன்படுத்த வேண்டும். புதிய ஏற்பாட்டின் சபையாக இல்லாத ஒரு சபை தன்னை புதிய ஏற்பாட்டின் சபை என்று அழைத்துக் கொள்ளக்கூடும்; ஆனால் அது உண்மையிலேயே புதிய ஏற்பாட்டின் சபையாக இருக்க வேண்டுமென்றால், புதிய ஏற்பாட்டின் முறையான மொழியை அது பயன்படுத்த வேண்டும்.

இன்றைய நாட்களில் தேவனுடைய சபையாக இருப்பதற்கு ஒப்புக் கொடுத்தலானது, உறுப்பினர்கள் தங்களைப் பெயரிட்டு விளக்கப்படுத்துவதன் மூலமாகக் கூடக் காண்பிக்கப்பட வேண்டும். தேவன் தமது சபைக்குப் பயன்படுத்திய பெயர்களையே பயன்படுத்துவது என்பது, தேவன் விரும்பியபடி இருக்கவும் செய்யவும் முயற்சி

*செய்யும் கிறிஸ்தவர்களுக்குக் குறைந்த பட்சம் ஒரு ஆரம்ப நடவடிக்கையாக இருக்கும். தேவன் சபையை அழைத்தபடியே கிறிஸ்தவர்கள் தங்களை அழைத்துக் கொள்ளும்போது, அவர்கள் தங்களைச் சரியான பாதையில் அழைத்துக் கொண்டு, தேவன் விரும்பும்படியே வாழ்பவர்களாய் இருக்கின்றார்கள் (பிற்சேர்க்கை 3ஐக் காணவும்).*

## பாட வினாக்கள்

*(விடைகள் 316 ம் பக்கங்களில்)*

1. *"இராஜ்யம்" என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் சபையுடன் தொடர்புள்ள வகையில் எவ்விதம் பயன்படுத்தப்படுகின்றது?*
2. *பவுல், சபையை "கிறிஸ்துவின் சபை" என்று குறிப்பிடுவது ஏன்? சபையின் உரிமைத்துவத்தைக் குறிப்பிடும் மற்ற பெயர்கள் யாவை?*
3. *சபைக்குப் பெயர்களாகப் புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ளவைகளையே நாம் பயன்படுத்த வேண்டும் என்பது ஏன்?*
4. *வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போலவே நாமும் சபையைப் பற்றிக் குறிப்பிடும்போது நிறைவேற்றப்படுவது என்ன?*
5. *சபையானது "தேவனுடைய குடும்பம்" என்று அழைக்கப்படுவது ஏன்?*
6. *"கிறிஸ்தவர்" என்ற வார்த்தையின் அடிப்படை அர்த்தம் என்ன? கிறிஸ்தவராக வாழ்க்கையில் ஒருவர் எவ்விதம் வாழ்கின்றார்?*
7. *கிறிஸ்தவரான நிலையில் தமது வாழ்வைப் பற்றிப் பவுல் பிலி. 1:21ல் எவ்விதம் விளக்கப்படுத்துகின்றார்?*
8. *"தேவனுடைய பிள்ளை" யாக இருப்பது என்பது எதை அர்த்தப்படுத்துகின்றது? தேவனோடு உள்ள இந்த உறவின் தன்மையைத் தருக.*
9. *புதிய ஏற்பாட்டில் "சீஷன்" என்ற வார்த்தை எத்தனை முறை காணப்படுகின்றது?*
10. *சீஷனின் தன்மைகளைத் தருக.*
11. *"பரிசுத்தவான்" என்ற வார்த்தையின் அடிப்படை அர்த்தத்தைத் தருக. ஒரு நபர் எப்பொழுது "பரிசுத்தவான்" ஆகின்றார்? பரிசுத்தவானின் தன்மைகள் என்ன?*

[1]புதிய ஏற்பாட்டில் அடிக்கடி சபையைப் பற்றிய விளக்கம் தரப்படுகின்றது, எடுத்துக்காட்டாக, அது ஒரு ஆட்டு மந்தையாகவும் (யோவா. 10:1), ஒரு திராட்சத் தோட்டமாகவும் (மத். 20:1), அல்லது ஒரு விலையுயர்ந்த முத்தாகவும் (மத். 13:45, 46) விளக்கமளிக்கப்படுகின்றது. இது போன்ற உருவகங்கள் சபையைப் பற்றி நாம் சிறந்த முறையில் புரிந்து கொள்வதற்கு உதவுகின்றன; ஆனால் இவைகள் விளக்கங்களாக மட்டுமே உள்ளன, சபையை அடையாளப்படுத்தும் வழிகள் அல்ல. [2]"பெயர்கள்" என்பவை சபையைக் குறிப்பதற்கான வேதாகமத்தின் வழிமுறைகள் ஆகும்.